235

235

கஸ்தூரி

(இனிய கதை விருந்து)

COMMERCIAL PRINTING
& PUBLISHING HOUSE,
46, MUTHUMARI CHETTY ST.
G. T. MADRAS.

319

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 NOV 1943
MADRAS

2173

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

(புதிய வெளியீடுகள்)

அன்பு நிலய நூல்கள்

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

இயற்றியவை

	ரூ.	அ.
இனிய தமிழ் இலக்கணம்	3	4
சிவஞான தீபம்	2	4
குண்டலகேசி அகவல்	0	4
சிதம்பர கீதம் (115 தமிழ்க் கீர்த்தனங்கள்) ராப்பர்	1	8
ஷை (உயர்ந்த பதிப்பு)	2	8
தேவ கானம் (125 தமிழ்க் கீர்த்தனங்கள்—அச்சில்)		
புதுக்கவி விட்மன்	1	8
மகாகவி ராஸீன்	1	4
வரகவி தாகூர் (200 பக்கங்கள்)	1	8
தாமரைக் குளம் முதலிய கதைகள்	1	12
கஸ்தூரி (சிறுகதை)	0	6
பைந்தமிழ்ச் சோலை (3-ஆம் பதிப்பு)	0	8
திருக்காட்சி (2-ஆம் பதிப்பு)	0	6
சுத்தானந்த பாரதியார் (வரலாறும், நூலாராய்ச்சியும்)	1	0
'எனது பாடல்' (கவி விட்மனின் "Song of Myself")	0	$1\frac{1}{2}$
சதாசிவ ப்ரம்மம்	0	2
கோபாலகிருஷ்ண பாரதியார்	0	$2\frac{1}{2}$
நடராஜ உபாசனை	0	4
வரகவி தாம்ஸன்	0	8
ஞானி எமர்ஸன்	0	6

அன்பு நிலயம்

இராமச்சந்திரபுரம் (Post)

திருச்சி (ஜில்லா)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 NOV 1943
MADRAS

பதிப்புரை

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் பல அனுபவக் கதைகள் எழுதியுள்ளார்; அவை ஒவ்வொன்றும் உள்ளத்தை அள்ளும் காட்சிப் படலங்களுடன் வாழ்விற்கும் வழிகாட்டுகின்றன. அக் கதைகளைத் தொடர்ச்சியாக வெளியிட்டுத் தமிழருக்கு வழங்க முன்வந்துள்ளோம்.

"கஸ்தூரி" என்னும் இச் சிறுகதை, படிக்கப் படிக்கத் தெவிட்டா தினிப்பது. உண்மையான காதல், இல்லறம், ஆண்பெண் இயல்புகளையும், சுய நலமற்ற பொதுநல வாழ்வையும், இக் கதை படம் பிடித்துக் காட்டுகிறது. இத்தகைய கதைகளால் தமிழருக்கு நல்லறிவும், வீரத் துணிவும், பரிசுத்த வாழ்க்கையும் உண்டாவது உறுதி.

இராமச்சந்திரபுரம்
20—7—1943

அன்பு நிலயத்தார்.

சுசு-கு-எடு೦

2123

உ

கஸ்தூரி

(இனிய கதை விருந்து)

1. ஆடிப் பெருக்கு

ஆடிப் பெருக்கு; காவேரி பொங்கிப் பூரிக்கிறது; அதன் அலைகள் வீராவேசத்துடன் கரையைத் தழுவிச் செல்கின்றன. அதன் வேகம் யாரையோ அள்ளி விழுங்குவதுபோல் இருக்கிறது. காவேரியின் வெள்ளப் பாட்டு காற்றுப் பாட்டுடன் சேர்ந்து வீறிடுகிறது. காலச் சருகுகள் அதில் சண்டதாண்டவ மாடுகின்றன. மரங்கள் இடுப்பை வளைத்துக் கைகளைப் புரட்டி வீரநடனம் புரிகின்றன. படிகளில் மான், மயில், குயில், கிளி, அன்னம், மைனுக் கூட்டங்கள் போல் ஆண்களும் பெண்களும் கட்டுச் சோறுண்டு குதூகலமாகப் பேசுகின்றனர். அவர்கள் கலகலச்சிரிப்பும், வேடிக்கைகளும் ஜலதரங்கம் போல் அலைப்பாட்டுடன் கலந்தொலிக்கின்றன.

கல்லூரி மாணவருக்கு இன்று கொண்டாட்டந் தான். ஓய்வும், வெள்ளமும் சேர்ந்து, ஆடிப்பட்டமும் வந்துவிட்டால் சொல்லவேண்டுமா? "அடே

மதுரை, ஏலே தஞ்சாவூர், ஓய் திருநெல்வேலி !" என்று அவரவர் ஊர்ப் பெயர்களை அழைத்துக் கொண்டு, அரட்டைக்கச்சேரி நடத்துகின்றனர் ! சிலர் காப்பிக்கடைப் பட்சணங்களைக் காலிபண்ணி, அவை மடித்த காகிதங்களைக் கத்திக்கப்பலாக்கி வெள்ளத்தில் வீசுகின்றனர். சிலர் கச்சை கட்டிக்கொண்டு வெள்ளத்துடன் குஸ்தி செய்யக் குதிக்கின்றனர். இந்த அமளியில் கலவாமல், ஒரு புத்தகத்தை வைத்துக்கொண்டு அதோ சிந்திப்பவனே லால்குடி கோபாலன். "அடே லால்குடி, கண் எங்கே போகிறது? அடலே தெரியுமடா !" என்று நண்பர் கேலி செய்கின்றனர். லால்குடி கோபாலன் மௌனப் புன்னகையுடன் கால்பார்வை புத்தகத்திலும், முக்கால் படித்துறையிலுமா யிருக்கிறுன்.

இந்தக் குதூகலக் காட்சியைப் பிளந்துகொண்டு, "ஐயோ கஸ்தூரி ! ஐயையோ !!" என்ருெரு தாய்க் குரல் அலறியது. படிவழுக்கி விழுந்த கஸ்தூரியை அதோ வெள்ளம் வாரிச் செல்கிறது. எல்லாரும் பயங்கரத் திகைப்புடன் நின்றனர். 'தடார்' என்று குதித்தான் கோபாலன் ; கூந்தலைப் பிடித்தான் ; கஸ்தூரியைத் தலைமேலே தூக்கி, அப்படியே படித்துறை சேர்த்தான். மாணவர் வேடிக்கைகள் பறந்து போயின ; உடனே சக்கரம் வைத்துச் சுழற்றித் தண்ணீரை வெளியேற்றினர். ஒருவன் சுடச்சுடக் காப்பி வாங்கிவந்து தந்தான். சிந்தாமணிச் சத்திரத்தில் கணப்புப் போட்டுச் சூடேற்றினர்.

கஸ்தூரி கண்விழித்தாள் ; கோபாலனைப் பார்த்தாள் ; "வந்தனம்" என்று நாணப் புன்னகை புரிந்

தாள்! "அப்பா உனக்குக் கோடி புண்ணியம் உண்டு; எனக்கு இவள் ஒரே பெண்; காப்பாற்றினாய். தீர்க்காயுசுடன் இரு!" என்றாள் தாய் அலமேலு. "என் கடமையையே செய்தேன்" என்றான் கோபாலன். "சபாஷ் லால்குடி! அடித்தான் முதல் பரிசு!" என்றனர் தோழர்!

2. கஸ்தூரியின் காதல்

"என் இரட்சகர்" என்று கஸ்தூரி கோபாலனையே நினைத்தாள். "இவளே என் துணைவி" என்று கோபாலன் நினைத்தான். இருவர் உள்ளமும் ஒன்று; சந்தர்ப்பம் சிறிது கிடைத்தால், வாழ்வும் ஒன்றாய் விடும். ஆனால் எப்படி? இவன் வடமன். அவள் வடகலை. இவனுக்கு ஒரு பருவதத்தைப் பெற்றோர் கட்டிவிட்டார்கள். அவள் கன்னிகை; படிக்கிறாள்.

கஸ்தூரியின் தகப்பனார் தாதாசாரியார், திருச்சி ஜில்லாக் கோர்ட்டு வக்கீல். அவர் தேசாபிமானி; முதல் சத்தியாக்கிரகத்தில் ஜெயிலையும் எட்டிப் பார்த்தவர். மகாத்மா காந்தி யென்றால் அவருக்குத் தெய்வம். "காந்தி ஐயா" என்று அவருக்குப் பெயர் வேறு வந்துவிட்டது. ஆதலால், அவர் கேஸ் கட்டுகளைக்கூடக் கவனிக்காமல், "யங் இந்தியா" படிப்பதும், இராட்டினம் சுழற்றுவதும், காந்திப் பேச்சுப் பேசுவதுமா யிருந்தார். ஆசாரியார் காந்தியைப்போலவே கொஞ்ச நாள் பிரமசரியம் அனுஷ்

டிப்பதாகச் சொல்லித் திண்ணையில் படுக்கை போட்டார். அதெல்லாம் அலமேலுவிடம் பலிக்கவில்லை. மறுவருஷமே இரத்தினம்போலப் பெண்குழந்தை பிறந்தது. அச்சமயம் கதர்நிதிக்காக மகாத்மா திருச்சிக்கு வந்தார். குழந்தையை காந்தி தம்பதிகள் ஆசீர்வதித்தனர். பெண்குழந்தைக்கு ஆசாரியார் "கஸ்தூரி" என்ற இனிய பெயரைச் சூட்டினர். காந்தியின் பத்தினியாரும் புன்னகையுடன் ஆமோதித்தார்.

கஸ்தூரி பிறந்த வேளை ஆசாரியாருக்கு நல்ல வரும்படி வந்தது. அதைக் கண்டு, இன்ஷூரன்ஸ் காரனும் வந்து ரூ. 5000-க்கு அவர் வாழ்வைப் பதிவு செய்துகொண்டு போய்விட்டான். தாதாசாரி தம் பெண்ணை மிகவும் கவனமாகப் போற்றி வளர்த்தார்; அவளை நன்ருகப் படிக்க வைத்து, சபர்மதிக்கு அனுப்ப விரும்பினர். "பிரமசரியம் வைத்துக்கொண்டால் இப்படிப்பட்ட இரத்தினத்தை நாம் காணமுடியுமா?" என்று அலமேலு அடிக்கடி இடித்துக்காட்டினள்; ஓர் ஆண் குழந்தை பெற வேண்டுமென்று சபலப்பட்டாள். அந்தோ! அதற்குள் காசநோய் வந்து, தாதாசாரியைக் கொண்டு போய்விட்டது. "கஸ்தூரி, நீ நன்ருகப் படி; உனக்குப் பிடித்த வாலிபனை மணந்துகொள்; காந்தியை மறக்காதே" என்று சொல்லி மகளுக்கு ஒரு முத்தமிட்டு, வாழ்க்கையினின்று அப்பா விடைபெற்ருர். துக்கம், துக்கம்!

கஸ்தூரி முத்துமுத்தாகப் பேசினள்; வகுப்பில் முதலாகத் தேறிப் பரிசுகள் பெற்றுவந்தாள். அவ

ளுக்குச் சம்பளம் இனும். எட்டாம் வகுப்பை எட்டியதும் அவள் பெரியவளானுள். பிறகு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அவள் அழகு வளர்ச்சி பெற்றது : காலை ரோஜாபோன்ற நிறம், தாமரை முகம், பவளச் செவ்வாய், முத்துப் பல், முல்லைச் சிரிப்பு, கிளி கொஞ்சும் பேச்சு, குயில் கொஞ்சும் குரல், அன்ன நடை, கார்மேகம் போன்ற கூந்தல் ! அழகே அவளுக்கு அடிமைப் பட்டதுபோலத் தோன்றியது. அவள் புன்னகையைப் பெற, இன்சொல்லைப் பருக, நடையைக் காண, இளம் வாலிபர் வட்டமிடத் தொடங்கினர். தேன் மலருக்கு வண்டுகள் வருவதும், கனிமரங்களுக்குப் பறவைகள் வருவதும் இயற்கைதானே ? கஸ்தூரிக்கு இறைவன் அபரிமிதமான அழகைத் தந்துவிட்டான். அவள் அன்புமயம். ஆனுல், அவள் அன்பைப் பூரணமாகப் பெறக்கூடியவன் இன்னும் வரவில்லை. கஸ்தூரி யாருடனும் அதிகமாகப் பேசமாட்டாள் ; காரியமாகவே இரண்டொரு வார்த்தை சொல்லிப் படிப்பில் கவனமா யிருப்பாள். ஆயிரம் கண்கள் அவளைப் பார்க்கும் ! ஆனுல், அவள் கண் யாரையும் ஊன்றிப் பாராது. கல்லூரி மாணவர் அப்படியும் இப்படியும் உலாவி, அவள் கடைக்கண் பாக்கியம் பெற வலைவிரிப்பர். அவள் யார் வலையிலும் சிக்காமல், ஒரு நாணப் புன்னகையுடன் தப்பிக்கொண்டு செல்வாள். குறும்புக்கார வாலிபர் சிலர் மொட்டைக் கடிதங்கள் எழுதுவர். எல்லாம் குப்பைத்தொட்டிக் குப் போகும். “ கொம்புபோலப் பெண்ணை, ஒருவன் கையில் பிடித்துக் கொடுக்காமல் இப்படி வைத்திருக் கிருயேடீ, அலமேலு !” என்று தெருப் பெண்கள் வம்

பளப்பர் ; கதைகட்டியும் விடுவர். கஸ்தூரி, " அம்மா இந்த வம்பையெல்லாம் நம்பாதே" என்று தன் காரியத்தைப் பார்ப்பாள்.

இச்சமயந்தான் காவேரியில் விழுந்து கஸ்தூரி கோபாலனுல் பிழைத்தாள். அலமேலு உடனே அவளுக்குக் கலியாணம் செய்து பேரன் எடுத்துவிட வேண்டுமென்று பரபரத்தாள்; அங்குமிங்கும் வரனைத் தேடினுள். வாலிபச் சந்தையில், கல்லூரிக்கடையில், வரதட்சிணை ஏலமே பலமாயிருந்தது. அலமேலுக்கு இருப்பதெல்லாம் அரபிகுளத் தெருவில் ஒரு வீடு, கணவன் செய்த பாதுகாப்புநிதி ரொக்கம் ஐயாயிரம். அதன் வட்டியிலிருந்து பிழைப்பு நடக்கிறது. அவள் வரதட்சிணைக்கு எங்கே போவாள்? அலமேலு தமையன் கொஞ்சம் பசையுள்ளவன். அவனுக்கு ஒரே பிள்ளை வாசுதேவன். வாசு படிப்பில் மட்டம். இண்டர் (Inter) பரீட்சையில் மூன்று தரம் குழி பறித்துவிட்டு, உபாத்தியாயர் வேலைக்குப் படித்து, மாதம் முப்பது ரூபாயில் புல்லூர் போர்டு பள்ளிக்கூடத்தில் வேலை பார்த்தான். அவன் பக்கமே சீட்டு விழுந்தது. தாயாரும் உறவினரும் பலாத்காரமாகக் கஸ்தூரிக்கு அவன் கையால் தாலி கட்டி ஆனந்தம் பாடி விட்டனர்.

கட்டின பிறகு என்ன செய்வது? கஸ்தூரி மனத்தையெல்லாம் கோபாலனிடம் வைத்து, வாசுவுடன் எப்படியோ காலந்தள்ளினுள். அவனைக் கண்டால் அவளுக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை தான் ; என்ன செய்வது? விதி அப்படி அமைந்தது. வாசு நோஞ்சல்; சட்டையைக் கழற்றினுல் எலும்புந்

தோலுமா யிருப்பான்; கூட்டு மார்பு! அவனுக்கு உயர்ந்த எண்ணம் கிடையாது. மேலதிகாரிகளைக் கெஞ்சிக் கூத்தாடிக் கைங்கரியம் செய்து தாஸானு தாஸனுக நடந்தே அவன் உபாத்தியாயர் வேலை பெற்ருன். தாலுகா போர்டு தலைவர் இராவ்பகதூர் குணசேகரம், ஒரு மாதிரிப் பேர்வழி. வாசு அவரிடம் போகும்போது பட்டைநாமத்தை அழித்து விடு வான். அவர் காலாலிட்டதைத் தலையாற் சுமப் பான். அவருக்கு நல்ல பிள்ளையாக நடந்துகொண்டத ஞலேதான் அவனுக்கு முப்பது ரூபாய் வேலை நிலைத் தது. அவன் அதிகாரிக்கு அடிமை.

அடிமை என்ற வார்த்தையே கஸ்தூரிக்குப் பிடிக்காது. அவள் காந்திபக்தை; தேசாவேசம் நிறைந்தவள். அவளுக்குத் திடசரீரமும், திடமன வீரமும், நல்ல அறிவும், பொதுநலத்திறமையும் உள்ள ஆண்மகனைக் கண்டாலே பிடிக்கும். அப்படிப்பட்ட வன் கோபாலனே.

3. கோபாலன் பட்ட அவஸ்தை

கஸ்தூரி, அசட்டுக் கணவனைக் கட்டிக்கொண்டு வருந்தினுள். கோபாலன், ஒரு போலி மினுக்கி யைக் கட்டிக்கொண்டு அவஸ்தைப் பட்டான். கோபாலன் கட்டுமஸ்தான ஆள்; முகத்தில்இராஜகளை யுள்ளவன்; நல்ல பரோபகாரி. ஏழை யெளியவ ருக்காக அவன் உள்ளம் எப்போதும் துடித்துக் கொண்டிருக்கும். கஸ்தூரியை முதலிற் கண்டபோது

கோபாலன் ஆனர்ஸ் (Hons.) வகுப்பில் படித்தான். அடுத்த வருஷம் அவனைச் சீமைக்கு அனுப்பி பாரட்லா வாக்கத் தந்தை முயன்ருர். தந்தை சிவகடாக்ஷம் சாஸ்திரியார், பழைய மடிசஞ்சிப் பேர்வழி ; கர்ம காண்டப் பித்தர். பூஜைப் பெட்டியிலிருக்கும் பாண லிங்கமே அவருக்குத் தெய்வம். இதர சாதியார்களுடன் அவர் பேசமாட்டார் ; யாராவது தொட்டால் ஒரு காக்காய் முழுக்குப் போட்டு விடுவார் ; நவநாகரிகம் கலிதர்பார் என்பார் ; பெண்களுக்கு அடுக்குள் படுக்குள் விவகாரமே சுதர்மம் என்பார். பணத்திற்கு மட்டும் அவர் சாதி வேறுபாடு பார்ப்பதில்லை ; எல்லாச் சாதியாரிடமும் கடன்தந்து வட்டியைக் கறந்து வாங்கி, இரும்புப் பெட்டகத்தில் வைத்துப் பூட்டி விடுவார். அவர் கவனமெல்லாம் பெட்டகத்தில் இருந்தது. அவர் அதன் திருவடியிலேயே பழியாய்க் கிடந்தார் ; செடிப்பவுன்களையும், பொன் மணி நகைகளையும் கண்டு கண்டு பூரிப்பார் ; கோபாலன் தலைதூக்கிக் காலியான பைகளை நிரப்பவில்லையே என்று அடிக்கடி விசனிப்பார் ; அவனை எப்படியாவது பாரிஸ்டராக்கி, கேசுகளைக் கொண்டுவந்து தள்ளி ஆயிரமும் பதினுயிரமுமாக மூட்டை கட்ட மனக்கோட்டை கட்டினுர் சிவகடாக்ஷம்.

கோபாலன் நிஷ்காம்ய கர்மயோகி. தேசமே அவனுக்குத் தெய்வம் ; தேசசேவையே புண்ணியம். விபூதி உருத்திராக்ஷத்தைவிடப் பொதுஜன சேவையும், நேர்மையான அன்புமே அவனுக்குப் பிரியம்! சிவபூஜையுடன் ஜீவபூஜையில் அவன் பரவசமடைந்தான். அருளுடன், ஏழை யெளியவர்களுக்கு அறி

வும் தொழிலும் தருதலே அந்தண்மை என்பது அவன் கொள்கை. தான் கற்றது பாமர ஜனங்களுக்குக் கல்வித்தொண்டு செய்யவே என்று அவன் நினைத்தான்; தன் கிராமத்தை மற்றொரு சபர்மதியும், சாந்திநிகேதனமுமாக ஆக்கவேண்டும் என்று அடிக்கடி கனவு கண்டான். அவனுக்கு மனு தருமத்தைவிட மனச்சாட்சிதான் அறநூல். ஆண் பெண் அடங்கலும் சரிநிகர்சமானராக, சுயேச்சையாக, யாருக்கும் அடிமைப்படாமல், உழைத்துப் பிழைத்து, அறிவை வளர்த்து, நன்றாயிருக்க வேண்டுமென்பது அவன் பிரார்த்தனை. பெண்களை அவன் நிமிர்ந்து நடக்கச் சொல்லுவான்; நன்றாகப் படிக்கச் சொல்லுவான்; வயதுவந்து மனங்கொண்ட வாலிபனை மணம் புரிந்துகொள்ளவே தூண்டுவான்; இளங் கைம்பெண்களை மறுமணம் புரிந்துகொள்ளச் சொல்லுவான்; பணத்தைப் பூட்டி வைப்பது இலட்சுமியைச் சிறையிடுவதாகுமாகையால், பணத்தைத் தொழிலாக்கிப் பல ஏழைகளுக்கு உழைப்பும் பிழைப்பும் தரவேண்டும் என்பான்; பணக்காரனைவிடப் பாட்டாளியையே அவன் மதிப்பான்; செல்வச் சோம்பலை வெறுப்பான். தகப்பனுக்கும் பிள்ளைக்கும் கொள்கையில் வேறுபாடு ஏற்பட்டு, மனக்கசப்பும் வளர்ந்தது. இந்த வேறுபாட்டுடன் மனைவியின் வக்கிரப் பிலுக்கும் சேர்ந்தது.

4. அடா, பெண்சாதிக் கள்ளா!

கோபாலன் ஆனர்ஸ் (B.A. Hons.) தேறியதும், பருவதம் வீட்டிற்கு வந்தாள். அவள் தகப்பனர் பொன்னு சாஸ்திரிகள் பைபையாகச் செடிப் பவுன் கட்டி வைத்திருக்கிறர். ஆனல், கை கருணைக் கிழங்கு! ஆயிரம் இம்மிக் கணக்குப் பார்த்தே ஒரு பைசா செலவிடுவார். மாப்பிள்ளைக்குச் செய்ய வேண்டிய சீர்செனத்திகளை அவர் சரியாகச் செய்யவில்லை. அதனல் தம்பதிகளைப் பள்ளியறைக்குள் விட்டுச் சோபனம் பாடியதுமே, இங்கே இலங்கிணி நீலுவுக்கும், கார்க்கோடகி லீலாவுக்கும் வார்த்தை பெருகிச் சண்டை பற்றிக்கொண்டது. சம்பந்தியம்மைமார்கள் வாய்க்குண்டு கணவர்களையும் தாக்க, சம்பந்திப் பிராமணர்கள் ஒருவர் குட்டை ஒருவர் திண்ணையில் போட்டு உடைத்துத் தள்ளினர். சாஸ்திரிக்கும் சாஸ்திரிக்கும் டார்பிடோ யுத்தம் வலுத்தது. எவ்வளவு டார்பிடோ இடி கொடுத்தாலும் அவரவர் இரும்புப் பெட்டகங்கள் மட்டும் திறக்கவில்லை. விடாமுண்டன் கொடாமுண்டன் கதைதான்! சிவகடாக்ஷம் சாஸ்திரிகள், "ஓய், கோபாலனை பாரிஸ்டருக்கு அனுப்ப வேண்டும்; ரூபா ஐயாயிரம் எண்ணி வைத்து மறு ஜோலி பாரும்!" என்றார்.

இதற்குள் பருவதம் கோபாலனைத் தூண்டி விட்டு, "நீங்கள் சீர்திருத்தம், பெண் சுதந்தரம் என்கிறீர்களே. உங்கள் தகப்பனருக்குக் கொஞ்சம் புத்தி சொல்லக் கூடாதோ? பணந்தான் அவருக்குப் பெரிதா யிருக்கிறது. நீங்கள் சீமைக்குப் போகப்

போவதில்லையே. என் பணம் கேட்கிறார்? அவர் வாயை அடக்கிவிட்டு வாருமே!'' என்றாள். கோபாலன் கதவைத் திறந்து கொண்டுவந்து, '' அப்பா நான் சீமைக்குப் போகவில்லை; எனக்கு வரதட்சிணை வியாபாரமே பிடிக்காது. நீ சும்மா இரு!'' என்று ஒரு போடு போட்டான். ''அடா, பெண்சாதிக் கள்ளா!'' என்றாள் தாய். ''அடபாவி, கெடுத்தாயே காரியத்தை. இதற்குத்தானா உன்னைப் படிக்க வைத்தேன்?'' என்றார் தகப்பனார். ''மாப்பிள்ளை தங்கக் கம்பி'' என்று சம்பந்திகளும் சமாதானமாகத் தூங்கினர்.

---

5. பருவதம் தர்பார்

வீட்டிற்கு வந்தபோதே கணவன் தன் சொற்படி கேட்டுவிட்டான். இனி, அவனைத் தன் இஷ்டப்படி ஆட்டி வைக்கலாம் என்பது பருவதத்தின் திடநம்பிக்கை. பருவதம், பர்மா யானைமாதிரிப் பெருத்துக் கொண்டிருந்தாள். பருவதம் பருவதந்தான்! அவள் செல்வமாக வளர்ந்தாள்; நிழல்மாடு; சுகவாசி; ஒரே பெண்: ஆதலால், கார்க்கோடகி லீலா அவளைத் தாங்கு தாங்கென்று தாங்கி வளர்த்தாள். பருவதம் லால்குடிப் பள்ளிக்கூடத்தில் ஏழாம் வகுப்பு வரையில் படித்தாள்; தமிழ் படிப்பாள்; ஆங்கிலம் உளறுவாள். மாமியாரை அவள் 'தஸ்புஸ்' என்று ஆங்கில வாணம் விட்டு மிரட்டுவாள்; மூக்குக் கண்ணாடி போட்டு இந்துப் பத்திரிகை மறைவில் தூங்கி

விழுவாள்! தமிழில் காதல் நாவல்கள் என்ருல் ஆவலாகப் படிப்பாள்; அடுப்புப் பக்கம் போகமாட்டாள்; முகம் புகைபட்டுக் கறுக்குமாம்; இப்படி யிருக்கும் துரும்பை அப்படி யெடுத்து வைக்க இடுப்பு வணங்காது. ஐந்து காலம் வயிற்றுப் பூஜை, இரண்டு காலம் அரட்டை, மீதி நேரம் அழகு செய்து கொள்வது, கண்ணுடி பார்ப்பது, கிராமபோனுக்கு ஊசி வைப்பது, குடும்பக் கலகத்திற்கும் மெல்ல ஊசி வைப்பது, கேரம் விளையாடுவது, பேசும் படம் பார்ப்பது, சில வேளை ஹார்மோனியத்தை வைத்துக் கொண்டு எல்லார் காதையும் துளைப்பது—இவையே அவள் வேலைகள். அவள் கோழித் தொண்டையை "மருகேலரா ஓ ராகவா!" என்று கிளப்பினல் "ஐயோ ராகவா" என்று எல்லாரும் காதைப் பொத்திக் கொண்டு தோட்டத்திற்கு ஓடிப் போவார்கள்! வீடு இடியாதிருக்க வேண்டுமே என்று கோபாலன் ஹார்மோனியத்தை ஒரு பஜனை மடத்திற்குத் தந்துவிட்டான். "என் பாட்டு எப்படி?" என்ருல், "அடடா, குயில் தோற்றுப்போகும்! என்ன வேண்டும்?" என்பான். இன்றேல் முகம் வெந்நீர்ச் சருவமாய் விடும். "என் காரியம் எப்படி?" என்ருல், சபாஷ் போடவேண்டும். இன்றேல் "என்ன செய்தாலும் இவர்களுக்கு நன்றியில்லை" என்று எரிந்து விழுவாள். பருவதம் "மேக்கப்" பிற்கு விதவிதமான முகச் சாயங்களில் பணத்தைக் கொட்டுவாள். நகைநட்டுக்களில் அசாத்திய மோகம். ஜவுளிக்காரனும் தட்டானும் வீட்டிற்கு வந்த மணியமாயிருப்பர். காலை எழுமணிக்கு எழுப்பினல், ஒன்பது மணிவரையில் அலங்கார வேலை நடந்து, ஊத்தைப்பல்லைப் பொய்ப் பல்லால் மறைத்து

மோகனச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு தன் அறையி லிருந்து பிரவேசமாகுமட்டும் அவளை யாரும் பார்க் கக்கூடாது. இரவில் கணவனுக்கு, "மாமி இப்படி ; நாத்தி அப்படி" என்று தலையணை மந்திரம் சொல்லித் தூக்கத்தைக் கெடுப்பாள் ; பகலில் வட்டிபோட்டுத் தூங்குவாள். அவளுக்கு நாளொரு பித்தமும் பொழு தொரு தலைவலியும் வரும் ; நடப்பதைவிடப் படுப் பதே அதிகம்.

கோபாலனுக்கு இதெல்லாம் பிடிக்கவில்லை ; அவன் சாது ; வெடுக்கென்று யாரையும் பேசமாட் டான். தகப்பனாரின் கருமித்தனமும் மூடக்கொள் கையும் பணத்தாசையும் அவனுக்குப் பிடிக்கவில்லை ; மனைவியின் செல்வச் சோம்பலும் போலிமினுக்கும் சுத்தமாகப் பிடிக்கவில்லை. கோபாலனுக்குத் தெய்வ பக்தி யுண்டு; ஆனால், அது மணியடித்துக் கிளம் பாது. அவனுக்கு உலகெல்லாம் கோயில் ; உயிர்த் தொகுதியே கடவுள் ; சேவையே வழிபாடு. அவன் மகாத்மாவிடம் திடபக்திகொண்டு அவர் கட்டளை யைப் பின்பற்றினான். கதர்த் தொண்டு, ஹரிஜன சேவை, மதுவிலக்கு—இந்த மூன்றையும் தன்னால் இயன்றமட்டும் நிறைவேற்ற விரும்பினான். தானே கையால் நூற்றுக் கைத்தறியில் நெய்யச் சொல்லி ஆடை யணிந்தான்; தன் மனைவிக்கும் கதர்ப்பழக்கம் செய்ய வேண்டும் என்று நினைத்து, ஒரு நாள் அவன் திருச்சியி லிருந்து அழகான கதர்ப் புடவை ஒன்று வாங்கி வந்தான் ; பருவதத்தின் மனத்தையும் குணத் தையும் வாழ்வையும் மாற்ற அன்புடன் தொடங்கி னான் :

கோபா : பருவதம் என்மேல் உனக்குப் பிரியந் தானே ?

பரு : பின்னே யார்மேல் பிரியம் வைக்கிறேனும்? எதற்கெடுத்தாலும் என்மேலே சந்தேகந் தானு ?

கோபா : கண்ணே, என்மேல் பிரியமானுல் நான் சொல்வதைக் கேட்பாயா ?

பரு : நீங்கள் சொல்வதையும் மாமி சொல்வதையும் கேட்டுக் கொண்டுதானே பொறுமையாயிருக்கிறேன். இன்னும் சொல்லவேண்டிய து பாக்கியிருந்தால் சொல்லுங்களேன் !

கோபா : அன்புப் பருவதம் !

பரு : சரி......அன்புப் பருவதத்திற்கு என்ன கொண்டு வந்திருக்கிறீர்கள் ?

கோபா : உனக்கு அழகான ஒரு புடவை கொண்டு வந்திருக்கிறேன். அதைத் தருமுன் கொஞ்சம் முன்னுரை வேண்டியிருக்கிறது.

பரு : நடக்கட்டுமே முன்னுரை பின்னுரை எல்லாம்.

கோபா : கண்ணே, நீ தினம் பத்திரிகை படிக்கிருய். மகாத்மா காந்தியைத் தெரியாதவர்கள் உலகில் இல்லை. உலகமெல்லாம் அவரைத் தெய்வமாகக் கொண்டாடுகிறது. இராஜாஜி, டாக்டர் ராஜன், வ. வெ. சு. ஐயர், மதுரை வைத்தியநாதையர், சத்தியமூர்த்தி, கோடீஸ்வரரான சித்தரசஞ்னதாஸர், மோதி

லால் நேரு, வீரச்சிங்கம் ஜவஹர்லால், இராஜேந்திர ப்ரசாத் போன்ற பெரியவர்கள் பெயர்களை நீ அறிவாய்; இவர்க ளெல்லாரும் மகாத்மாவின் சிறந்த பக்தர்கள். காந்தி பொதுஜன ஊழியத்திற்கே சர்வ த்யாகம் செய்த மகான்; பிறரை வருத்தாமல் சாத்விக எதிர்ப்பினாலேயே தீமையைத் திருத்தும் சாது. அவர் தென்னாஃப்ரிக்காவில் சத்தியாக்கிரகம் செய்து நம் ஏழைக் கூலிகளைக் காப்பாற்றினர்; இந்திய விடுதலைக்காக அல்லும் பகலும் பாடுபட்டுப் பல தடவை சிறை புகுந்து வருந்தினர்; பிறர் குற்றத்திற்காகத் தாமே பட்டினி யிருந்தார். சமீபத்தில் அவர் இருபது நாள் பட்டினி யிருந்ததை அறிவாய். அப்படிப் பட்ட மகான் தேசநன்மைக்காக நம்மைச் சில காரியங்கள் செய்யச் சொல்லுகிறார். அவற்றுள் முதல் காரியம் ஏழை ஜனங்கள் கையால் நூற்று நெய்த கதர் ஆடை அணிவதேயாம். சரோஜினி தேவி அழகான கதர்ச் சேலை அணிகிறார். கண்ணே, நீ சமத்து; என்மேல் பிரியம் உண்டானால் நீயும் என்போலக் கதர் அணிய வேண்டும். இதோ அழகான சேலை வாங்கி வந்திருக்கிறேன், பார்!

கோபாலன் புடவையைக் காட்டினன்: பூக்கரை போட்டது; சிவப்பும் பச்சையும் சேர்ந்து நிறம் கண்ணைப் பறிக்கிறது. கோபாலன் ஆவலாக மனைவி முகத்தைப் பார்த்தான். பருவதம் "இஹிஹி" என்று ஒரு கேலிச் சிரிப்புச் சிரித்துத் திருவாய்மலர்ந் தருளினள்!

பரு: ஆமாம், உங்களுக்கு என்மேல் பிரியந் தானே?

கோபா: கொள்ளைப் பிரியம்.

பரு: அப்படியானல் எனக்குப் பிரியமானதைச் செய்வீரோனே ?

கோபா: சொல்லு, பிறகு செய்கிறேன்.

பரு: நெல் போடச் சாக்கில்லையாம். இந்தப் புடவையை மூன்று சாக்காகத் தைக்கலாம். தையற்காரனிடம் கொடுத்து வாங்கித் தாருங்கள்; எங்கப்பாவுக்கு அனுப்புகிறேன்.

கோபா: அடி அதிகப் பிரசங்கி ! என்ன வாய்த்துடுக்கு ? கஸ்தூரிபாய், சரோஜினி, விஜயலக்ஷ்மி பண்டிதை, ருக்மிணிலக்ஷ்மீபதி, இராதாபாய், அம்மு போன்ற பெரிய பெரிய பெண்கள் இந்தக் கதரே உடுத்துகிருர்கள். உனக்கு மகாத்மாவின் கதர் அவ்வளவு கேலியாய்ப் போய்விட்டதா ?

பரு: இன்றைக்கு இந்த வங்காளஞ் சாக்கு கட்டச் சொல்வீர்கள்; நாளையே கண்டாங்கி கட்டச் சொல்வீர்கள்போ லிருக்கிறதே ! இதென்னடீ ! நான் வளர்ந்த சீரென்ன, படித்த வரிசை யென்ன ? கொண்டு வந்த மஞ்சள் காணிக்கை யென்ன ? எனக்குச் சொத்தில்லையா ? ரூ. 200-க்குக் குறைந்த பட்டை நான் உடுத்தியதில்லை. உங்கள் தரித்திரம் உங்களுடனே யிருக்கட்டுமே. என் வைரநகைக்குத் தக்கபடி பட்டுடுத்த வேண்டிய பணம் எங்கப்பாவிடம் இருக்கிறதே.

கோபா: பருவதம்...கொஞ்சம் யோசி! உன் திருமேனியில் பதினயிரம் ரூபாய்க்கு ஆடையாபரணங்கள் இருக்கின்றன. ஒரு பெண்ணுக்குப் பத்து

ரூபாவில் கதர்ப்புடவை, ஒரு ரூபாவில் இரவிக்கை போதுமே. மஞ்சள் பூசிக் குங்குமம் வைத்துக்கொண்டால் அந்த லக்ஷ்மீகரமே அழகு! உன் நகைச்சுமையைக் கொண்டு ஆயிரம் இராட்டினம் வாங்கினுல் ஆயிரம் ஏழைகள், பல தறிகாரர், உழைத்துப் பிழைப்பார்களே. அவர்கள் உணவில் மண்ணைப்போட்டன்றோ நீ மேனிமினுக்குகிருய். அம்மா நாம் எளிய வாழ்வு வாழ்ந்துகொண்டு, ஏழைகளுக்கு நம்மால் ஆன உதவி செய்வோம்.

பரு: இதென்ன விபரீதம்? எங்கப்பனுக்கு ரொக்கம் இரண்டுலகாரம் இருக்கிறது. நான் நகை போடக் கூடாதாம், பட்டுடுத்தக் கூடாதாம்! இன்னும் என்ன? சொல்லி விடுங்கள்!

கோபா: நீ, இனி, முகச்சாயம் உதட்டுச் சாயம் தடவக்கூடாது. மஞ்சள் குங்குமம் போதும். நீ அழகு செய்து கொள்வது எனக்கா, வேறு யாருக்குமா?

பரு: நன்ருயிருக்கிறது பேச்சு! 'ஐயோ அதிசயமே; ஆமடா விதிவசமே' என்ருனும்! என் அழகில் உங்களுக்கேன் பொருமை? மாமி சொல்லித் தந்தாளா? இன்னும் பாக்கி யிருந்தால் சொல்லி விடுங்கள்! உங்களுடன் பறைச்சேரிக்கும் வரச் சொல்லுவீர்களோ? அல்லது கள்ளுக்கடை மறியலுக்கும் வரச் சொல்லுவீர்களோ? 'ஐயா தரித்திரமே, நல்லதங்கா சரித்திரமே!' என்ருனும்.

கோபா: நான் ஒன்று சொன்னுல் நீ ஒன்று சொல்லுகிருயே. பருவதம், உண்பதும் உடுப்பதும்

உறங்குவதுந்தானு மனிதஜன்மம்? மிருகங்கள்கூட உண்டுறங்கிக் குட்டிபோட்டு வாழவில்லையா? மனிதனுகப் பிறந்தால், தியாகம் வேண்டும். உலகிற்கு ஏதாவது நல்லது செய்யவேண்டும். இந்தக் காலத்தில் அற்புதமான தியாகம் செய்த மகான் ஒருவர் வழியை அனுஷ்டிக்கச் சொன்னல், என்னென்னவோ வம்பளக்கிருயே. என்னிடந்தானு இப்படிப் பேசுவது?

பரு: நானு வம்பளக்கிறேன்? நீரே ஒரு சாக்கை வாங்கிவந்து, என் வாயைப் பெருக்கிச் சந்திக்கிழுக்கிறீர். என் ஜோலிக்கு யாரும் வரக்கூடாது. நீங்கள் எனக்குப் புடவை இரவிக்கை வாங்கித் தர வேண்டிய அவசியமில்லை. உங்கப்பா பணம் இரும்புப் பெட்டியிலே தூங்கட்டும். எங்கப்பா தருவதை அணிந்துகொள்ள எனக்கு உரிமை யுண்டு. இந்த வேதாந்தமெல்லாம் எங்கப்பாவுக்குப் பிடிக்காது. அவர் கேட்டால், தெரியும் செய்தி.

கோபா: சட், அடக்கு வாயை! ஒரே பேச்சு கதர்ப் புடவை உடுத்துவாயா?

பரு: எனக்கேன் தலைவிதி?

கோபா: சரி, இன்று முதல் உன்னை நான் தொடமாட்டேன்; கதர் உடுத்தினலே தொடுவேன்.

பரு: சரி நானும் 'திருநீலகண்டம்' போடுகிறேன். கதர் உடுத்தி, காந்திப் பேச்செடுக்குமட்டும் உங்களைத் தொடமாட்டேன்.

இருவரும் பிரிந்தனர்.

---

6. விபரீதமானது

காரியம் விபரீதமாகி விட்டது. அன்றிரவே பருவதம் தன் அறையில் கதவை மூடிக்கொண்டு அபாயமான கடிதம் ஒன்றெழுதித் தன் ஆள்மூலம் அனுப்பி விட்டாள். மறுநாளே சம்பந்திகள் புலிப் பாய்ச்சலில் வந்துவிட்டனர். உடனே கார்க்கோடகி லீலா, பீரங்கி வாயைத் திறந்துவிட்டாள். பொன்னு சாஸ்திரியார் டம்டமார் குண்டுமாதிரிப் பழியைத் தூக்கிப் போட்டார். "ஹா, என் செல்லப் பருவதம், பூப்போலே வளர்ந்தவள், இந்தக் கருமிப் பிச்சன் வீட்டில் வந்து, வேளாவேளை சாப்பாடுகூடக் கிடையாது. வேலை இடுப்பொடிகிறது. பசுப்போன்ற பெண், கிளிபோன்ற பெண்! அவள் சத்தம் போட்டறியேன். பரமசாது, காரியத்திற்குக் கப்பல், கணவனுக்கு எதிர்பேசா உத்தமி! கலியுக நளாயனி என்ருல் அவளுக்கே தகும்! மாமி கண்டபடி பேசுகிருளாம், நாத்தி ஏசுகிருளாம், மாப்பிள்ளை கண்டாங்கி கட்டச் சொல்லுகிருனும், சாக்கை உடுத்தச் சொல்லுகிருனும், பூ வைக்கக் கூடாதாம், நகை நட்டெல்லாம் கழற்றித் தரச் சொல்லுகிருனும்! எந்தப் பரத்தைக்குக் கொடுக்கவோ தெரியவில்லை. இந்திரவாளிப் புடவை கட்டிய என் மயில், முரட்டுத் துணி கட்டுவதாம். அதுவும் இராட்டினம் சுற்றித்தான் கட்டவேண்டுமாம். இல்லாவிட்டால் தொடமாட்டானும். பிரமசரியமாம், காந்தியாம், காங்கிரஸாம்! என் பெண் சேரிக்கும் கள்ளுக்கடைக்கும் வரவேண்டுமாம்! ஜயிலுக்கு வரவேண்டுமாம்! ஏங்காணும் மாப்பிள்ளை, இந்த வக்கிரபுத்தி முன்பே தெரிந்திருந்தால் என்

பெண்ணை வேறிடத்தில் தந்திருப்பேனே" என்று விளாசு விளாசென்று விளாசித்தள்ளி, இரண்டு மணி நேரம் கோபாலன் வாயெடுக்க முடியாமல் செய்தார் சம்பந்தி.

கோபாலன் அமைதியாக, "மாமா, உலகம் மகான் என்று மதிக்கும் காந்தியின் பத்தினி அணியும் இந்தக் கதர்ப் புடவை உடுத்த அன்புடன் சொன்னேன். அதற்கு இந்த ரகளை நடப்பதானால், இனி நான் உலகை எப்படி நம்புவது?" என்றான்.

"அம்மா பருவதம், இவன் என்ன சொன்னான்? தைரியமாகச் சொல்லு!" என்று பொன்னு மகளைக் கண் சிமிட்டித் தூண்டினார்.

பருவதம் கள்ளி வேஷம் போட்டாள். பத்துச் சொட்டு கண்ணீரும் வரவழைத்துக் கொண்டு, தலையையும் விரித்துக்கொண்டு, "நான் நல்ல புடவை கட்டிக்கக் கூடாதாம், என்னைத் தொடவே பிடிக்கவில்லையாம். நான் நகை போடுவது பாபமாம். என் பொன் நகையெல்லாம் விற்று இராட்டினம் வாங்குவாராம். நான் அழகு செய்து கொண்டால் அவருக்குச் சந்தேகமா யிருக்கிறதாம். சாப்பாட்டைக் குறைக்க வேண்டுமாம். நான் சாப்பிடுவதனாலே தான் கொல்லைப்புறமுள்ள குடியானவர்கள் பட்டினி கிடக்கிறார்களாம். நான் அப்படி இராக்ஷஸிபோலத் தின்கிறேனாம். நான் இருப்பதே இவர்களுக்கு உபத்திரவமா யிருக்கிறதாம்!"

போதும். லீலாவும் பொன்னுவும் விருட்டென்றெழுந்தனர். "இந்தத் தரித்திர வீட்டில் என்

இராஜாத்தி இருக்க லாயக்கில்லை. மாப்பிள்ளை காந்திக் கதர்ப் பேச்சை விட்டு ஓர் உத்தியோகம் பார்க்க வேண்டும்; துண்டுக் குடித்தனம் வைக்க வேண்டும். பிறகே பெண்ணை அனுப்புவேன். வா பருவதம், நம் அகத்திற்குப் போவோம்" என்று வீறிட்டனர்.

கோபாலன், "ததாஸ்து" என்று உரக்கச் சொல்லிவிட்டான். அவனை ஒரு புலிப் பார்வை பார்த்து, பொன்னு லீலா பருவதத்தை வண்டியில் ஏற்றி அழைத்துச் சென்றனர். பிறகு அவர்களும் அனுப்பவில்லை. கோபாலனும் விரும்பவில்லை. பருவ தத்திற்கும் உடம்பு ஊதிப்போய் கம்பெனி மருந்து களையெல்லாம் காலி பண்ணிக்கொண்டு படுத்த படுக் கையா யிருந்தாள்.

"அட சண்டாளா, உன்னாலன்றோ இந்த வம்பு வளர்ந்தது: கதராம், காந்தியாம்! பயலே, நீ ஒழுங் காக உத்யோகம் 'கித்யோகம்' பார்த்துக்கொண்டு குடும்பக் கருத்துடன் இரு! இன்றேல் சொத்து மண்ணுதான், கவனம்!" என்று சிவகடாக்ஷம் வேறு பாய்ந்தார். சம்பந்திகள் ஊரில் ஏகப் புகார் கிளப்பி விட்டனர். கோபாலனுக்கு வீடு பிடிக்கவில்லை. ஊரே பிடிக்கவில்லை. இங்கிருந்து வாழ்வை வீணாக்க வும் பிடிக்கவில்லை. ஒரு நாள் இரவு அவன் எங்கோ கம்பி நீட்டி விட்டான்: அவன் படுக்கையில் ஒரு சீட்டிருந்தது. "அப்பா நமஸ்காரம்; சொத்தை நீயே இரும்புப் பெட்டியில் பூட்டிச் சாவியைப் பத்தி ரமாக வைத்துக்கொள். நான் சுதந்தரமாகத் தேச சேவை செய்யக் கிளம்பி விட்டேன். இனி, யாரும்

என்னை எதிர்பார்க்க வேண்டா.'' சில காலம் கோபாலனைப்பற்றி ஒன்றுமே தெரியவில்லை.

இதனிடையே கஸ்தூரி கதையைக் கேளுங்கள்.

---

7. கஸ்தூரியின் கற்பு

புல்லூர் போர்டு பள்ளிக்கூடத்தில் வாசு அடிமை உபாத்தியாயரா யிருப்பதை நாம் முன்பே அறிந்தோம். கஸ்தூரி கட்டிக்கொண்ட பாபத்திற்குச் சமைத்துப்போட்டுக் கொண்டிருந்தாள். மற்றப்படி அவளுக்கும் அவனுக்கும் தேக சம்பந்தங்கூடக் கிடையாது. அவன் சுத்த சோனி; அவளைக் கண்டால் அவனுக்குப் பயம். தன்னை விட்டு ஓடாதிருந்தால் போதும் என்ற அச்சத்துடன் கவனமாகவே நடந்தான். இராவ்பகதூர் குணசேகரம் பிள்ளை இந்த நல்ல பார்ப்பானைச் சக்கைவேலை வாங்கினர். அவனை அவர் '' அப்பாசு '' என்றே அழைப்பார். இவன் '' எஜமான் '' என்பான். அவனைப் பலமாக வசப்படுத்தியதும், பகதூர் கடைக்கண் அடிக்கடி கஸ்தூரியிடம் போகத் தொடங்கியது. கஸ்தூரி ஒரு கதர் புடவை இரவிக்கை அணிந்து, குங்குமம் இட்டிருப்பாள். வேறு நகை கிடையாது. நகை நாணயமெல்லாம் விற்று க்ஷேம நிதியில் அவள் போட்டுவைத்தாள். அந்த எளிய உடையிலும் அவள் பட்டத்து ராணி போல் கட்டழகுடன் பொலிந்தாள். கோபாலனை மணந்திருந்தால், தன் வாழ்வு எவ்வளவு இன்பகரமாயிருந்திருக்கும் என்று அவள் நினைக்காத நாள் கிடை

யாது. இந்தச் சோனி வாசுவின் மூலம் தனக்கொரு சோனி பிறக்கவேண்டா என்று, அவள் அந்த விஷ யத்தில் உஷாரா யிருந்தாள்; நேரத்தை மிச்சம் பிடித்துக் கல்வியறிவைப் பெருக்கினுள்; பெண் குழந்தைகளுக்கு வீட்டில் கல்வி கற்பித்தாள். இப்படி யிருக்கும் நல்ல பெண்ணுக்குக் கொடிய சோதனை கள் வந்தன.

குணசேகரம் பெரிய செல்வன். ஆனல், வீட் டில் சந்தோஷமில்லை. அவன் இரண்டு பெண்களை மணந்தான். இரண்டு பேரும் வீட்டை வைத்திய சாலையாக்கிவிட்டார்கள். மூத்தவளுக்குக் காச நோயால் முகம் மூஞ்சூருகிவிட்டது. இளையவளுக்கு இரத்தச் சோகை பிடித்து உடம்பு தேவாங்காய்விட் டது. அவருக்குப் பிள்ளைகள் இல்லை. கடவுள், கோயில், பூஜை, வேதம், புராணம்—எல்லாம் பார்ப்ப னப் புரட்டு என்ற தலைப்பில் அடக்கிவிடுவார்; நன் ருகச் சாப்பிடுவார், குடிப்பார், வாழ்வின் சுக போகங்களை அனுபவிக்க அங்குமிங்கும் மோப்பம் பிடித்தலைவார்; தம்மை எபிகூரின் அவதாரம் என் பார். ஒரு பார்ப்பான் தமக்கு அடிமையா யிருப்பது பற்றி அவருக்கு மிக்க மகிழ்ச்சி. மற்ருேர் எண்ண மும் நிவைவேறிவிட்டால் பூரித்துப்போவார்! அதற்கு வாசுவைத் தயார் செய்தார். ஒருநாள் வாசுவைத் தம் மோட்டாரில் அழைத்துச் சென்று காப்பிக் கடைப் பணிகாரங்கள் நிரம்பத் தந்து......மனைவிக் கும் கொண்டுபோய்க் கொடுக்கச் சொன்னர். வாசு வாயெல்லாம் பல்லாக வந்து இரண்டு பொட்டணம் லட்டு ஜிலேபி தந்தான்......கஸ்தூரி அதை அப்

படியே வாங்கிச் சிறு குழந்தைகளுக்குத் தந்துவிட்டாள். மறுநாள் பகதூர் வாசுவுக்குப் பட்டுப் புடவை வாங்கித் தந்து, அதைக் கஸ்தூரி உடுத்திக்கொண்டு தம் வீட்டிற்கு ஒருதரம் வந்துபோகச் சொன்னார். கஸ்தூரி தான் கதரே உடுத்துவதாகச் சொல்லிப் பட்டை மறுத்துவிட்டாள். சில நாட்கழித்து குணசேகரம் வாசுவைத் தனியே தம் மாடியில் வைத்துச் சில கேள்விகள் கேட்டார் :

குண : அப்பாசு, உனக்கேன் இன்னும் குழந்தை பிறக்கவில்லை ?

வாசு : என் மனைவிக்கு அந்த ஆசை கிடையாது.

குண : நீ ஒடிந்து விழுவதைப்போல் இருக்கிறாய். அவளுக்கு உன்னைப் பிடிக்கவில்லை. என்னைப் பார், எவ்வளவு திடமாயிருக்கிறேன் !

வாசு : எசமானைப்போல் நான் இருக்க முடியுமா ? நான் ஏழை. எனக்கேற்றது ஒரு கூரை வீடும் இரண்டு வேளை சாப்பாடுந்தானே.

குண : வாசு, உன்மேல் எனக்கு அசாத்தியப் பிரியம் ; உனக்கு ஒரு வழிசெய்கிறேன்.

வாசு : எசமான் தயவிருந்தாலே போதும். பிரபுவின் கடைக்கண் பட்டால் போதும், தாஸன் என்ன வேண்டுமானாலும் செய்கிறேன்.

குண : முதலில் ஒன்று செய் ! நாளையே என் மாளிகையில் ஒரு அங்கணம் தனியாகத் தருகிறேன் ; வந்து குடியிரு ; உன் சாப்பாட்டிற்கு என் பண்ணை

நெல் தருகிறேன் ; பொங்கல் தீபாவளிக்குப் புடவை துணி தருகிறேன் ; உன் சம்பளம் மிச்சம். என்னிடம் வட்டிக்குப் போட்டு வைக்கலாம்......என்ன சொல்லுகிருய் ?

வாசு : அவளைக் கேட்டுச் சொல்லுகிறேன்.

குண : அட அப்பாசு, நீ சொன்னபடியன்ரே அவள் நடக்கவேண்டும் ?

வாசு : அவள் சொன்னபடிதான் நான் நடப்பது. அவள் கெட்டிக்காரி ; படித்தவள்.

குண : அப்படியானல் என் மனைவிகளுக்குப் படிப்புச் சொல்லித் தரட்டுமே. மாதம் ஏதாவது தருகிறேன்.

வாசு : எஜமான் திருவுள்ளத்தைச் சொல்லி உத்தரவு கேட்கிறேன்.

குண : எப்படியாவது நாளை இங்கே வந்துவிடு ! மோட்டார் அனுப்புவேன்.

வாசு வந்தான். "கஸ்தூரி, நமக்குப் புதிய அதிட்டம் வந்திருக்கிறது" என்று எல்லாம் சொல்லி, "பெரிய மனிதர் கூப்பிடுகிருர். நாம் அவர் பங்களாவில் சுகமாக இருக்கலாமே" என்று மனைவியை வாசு குல்லாப்போட்டான், கெஞ்சினுன். கஸ்தூரி முன்பே எல்லாம் ஊகித்துக்கொண்டாள். "எங்களுக்குக் கூரைவீடும், கூழும், கதர் ஆடையும் போதும் ; தங்கள் எண்ணம் நடக்காது" என்று சொல்லுங்கள் என்ருள். மறுநாள் பகதூரே ரோல்ஸ் ராய்ஸ் மோட்டாரில் வந்துவிட்டார். "வாசு, சாமான்களைச் சேவ

கர் கொண்டு வருவார். இரண்டுபேரும் இப்படியே மோட்டாரில் வாருங்கள்" என்று வற்புறுத்தினர். வாசு, "அடி, அடி, பெரியமனிதர் நம்மை லட்சியம் பண்ணி மோட்டார் கொண்டுவந்திருக்கிறார். வாடி, பங்களாவில் வாழலாம்" என்று கெஞ்சினன், காலில் விழுந்தான். "நீங்கள் பங்களா சுகத்தை அனுபவித்து அடிமையாயிருங்கள். நான் இப்படியே திருச்சிக்குப் போகிறேன்" என்று கொல்லைப்புறம் ஓடினுள் கஸ்தூரி. வாசு "அடியடியே வேண்டாமடீ! உனக்குச் சம்மதமில்லையென்று எசமானிடம் சொல்லி விடுகிறேன்" என்று வாசு கெஞ்சினன். கஸ்தூரி "இனி,அவன் பேச்செடுத்தால் நான் இங்கிருக்க மாட்டேன்." என்ற நிபந்தனையுடன் வீட்டிற் புகுந்தாள். வாசு, எசமானிடம் கண்ணீர் விட்டு "அவள் சம்மதிக்கவில்லை" என்றான். "போடா அப்பாசு; பெண்சாதியை ஆளத் தெரியவில்லை" என்று இடித்துக்காட்டித் தம் சூழ்ச்சி நிறைவேறப் பல தந்திரங்கள் செய்தார் பகதூர். முடிவில் குணசேகரம் ஆத்திரத்தை வாசுமேல் திருப்பி, "வேலை போய்விடும் என்ன சொல்லுகிறாய்?" என்றபோதுதான் அவனுக்குத் தன் அடிமைத்தனத்தின், சங்கடம் தெரிந்தது. குணசேகரம் புல்லூருக்குச் சர்வாதிகாரி; அவன் வைத்தது சட்டம். பஞ்சமா பாதகங்களில் எது செய்தாலும் அவனைக் கேட்பாரில்லை. ஆதலால் முடிவில் இராவண வேலை செய்துவிடுவதென்று ஏற்பாடு செய்தான்; வாசுவைத் தன் வீட்டில் சிறை வைத்துவிட்டான்.

அதே இரவில் மோட்டார் வந்தது. ஐந்து தடி

யர் வீட்டுக் கதவைத் தட்டினர்; சத்தமில்லை. கொல்லைப்புறம் சென்று பார்த்தனர். கதவு திறந்திருந்தது. உள்ளே புகுந்தனர். ஆள் இல்லை. கஸ்தூரி எங்கே? ஐந்தாண்டுகளாக நமக்கும் தெரியாது. வாசு அழுதான். பகதூர் "போடா அப்பாசு" என்று வேலையை விட்டுத் துரத்தினர். வாசு திருச்சிக்கு வந்தான், தேடினன். கஸ்தூரியைக் காணவில்லை. வாசு ஏக்கமும் சோகையும் பிடித்து உயிர்துடித்துக் கொண்டிருந்தான்.

கோபாலனை இனித் தொடர்வோம்.

8. காந்தி - கோபால்

கோபாலன் நெஞ்சுரங்கொண்ட வீரன். யார் கையையும் எதிர்பாராமல் தன்னுதவியால் முன்னேற வேண்டுமென்பது அவன் கொள்கை. அவன் உலகில் இரண்டு காரியம் விரும்பினன்: ஒன்று எப்படியாவது கஸ்தூரியைத் தன் வாழ்க்கைத் துணைவியாகக் கொள்வது; மற்றொன்று இருவருமே மகாத்மாவுடன் தேசசேவை புரிவது. லால்குடியை விட்டதும் அவன் திருச்சிராப்பள்ளிக்கு வந்து அரபிகுளத் தெருவில் விசாரித்தான்; அலமேலு திவ்யதேசயாத்திரை சென்றிருப்பதாக அறிந்தான்; கஸ்தூரிக்குக் கலியாணம் ஆனவிபரமும் தெரிந்து கொண்டான். வேறொரு பெண்ணையும் இனி அவன் விரும்பவில்லை; இனித் தேசசேவைதான் அவன் குறிப்பு. தேசசேவையிலும் ஜனங்களுக்குக் கல்வியும் தொழிலும் பரப்பி

நாட்டின் மடமை யிருளையும் வறுமைத் துயரையும் தீர்ப்பதே அவனது நோக்கம்.

அப்போது நல்ல வேளையாக மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரி சபை பிரபலமா யிருந்தது. இராஜாஜியின் தலைமையில் இராமராஜ்யம் நடந்தது. கோபாலன் நேராக இராஜாஜியைப் பார்த்தான். அவர் ஆளை ஊடுருவி யறிந்தார்: "கோபாலா, நீ உடனே ஹிந்துஸ்தானி கற்றுக்கொள். உன்னை வார்தாவுக்கு அனுப்புகிறேன்; அங்கே வார்தா கல்வி முறை பழகிக்கொண்டு வா! பிறகு பள்ளிக்கூடம் அமைக்கலாம். நீ தமிழ்நாடு முழுவதும் கைத்தொழிற் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தும் தொண்டு செய்! அதுதான் உன் திறமைக்குத் தகுந்த பணி" என்றார். "உத்தரவுப்படியே நடக்கிறேன்" என்று கோபாலன் இந்திப் பிரசாரசபையில் சேர்ந்து, ஆறுமாதத்தில் நன்றாக ஹிந்துஸ்தானி பேச எழுதக் கற்றுக்கொண்டான். இராஜாஜி அவனை உடனே மகாத்மாவுக்குச் சிபார்சு செய்து அனுப்பினார்.

பிருந்தாவனத்திற்குச் சென்ற சைதன்யர்போல் ஆனந்த பரவசங்கொண்டு கோபாலன் வார்தா சேர்ந்தான். அவன் சிவகிராமத்தில் நுழைந்த போதே, மகாத்மா உலாவப் புறப்பட்டார். அப்படியே அவர் காலில் விழுந்து, "என் ரக்ஷகரே" என்று ஆனந்தக் கண்ணீர்விட்டு நின்றான் கோபாலன். மகாத்மா அவனுடைய பரிசுத்தமான உள்ளத்தை அறிந்து, இராஜாஜியின் கடிதமும் கண்டு பரமசந்தோஷப்பட்டு "நீ என்னுடனே இரு, கோபால். வா உலாவி வருவோம்" என்று அழைத்துச் சென்றார்.

ராமதாஸ் தேவதாஸ் போலவே கோபாலனும் தம் மகன் என்று காந்தி பாவித்தார். அவனும் அப்படி நடந்துகொண்டான். கஸ்தூரிபாயிடம் "நான் உனக்கோர் அருமையான குமாரனைக் கொண்டுவந்திருக்கிறேன்" என்று காட்டினார். கோபாலன் மாதாஜியை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, ஆசிபெற்றான். அவன் பேசிய ஹிந்தி எல்லாருக்கும் பெருமகிழ் வளித்தது. அவன் பேச்சில் கவிரசம் ததும்பியது. கோபாலன் சம்ஸ்கிருதம் நன்ருகத் தெரிந்தவன்; ஆகையால், விநோபா பாவேயுடன் நெருங்கிய நட்புக் கொண்டான். இருவரும் கொஞ்சகாலம் கிராமங்களில் கதர்த் தொண்டு செய்தனர். குமரப்பா கோபாலனுக்கு வார்தா கல்வித் திட்டத்தை விளக்கினர். படித்தவனுகையால், கோபால் ஒரு மாதத்தில் பயிற்சிபெற்று, உபாத்தியாயராகி, பல மாணவரைத் தயாரிக்கத் தொடங்கினன். கல்வியும் தொழிலும் சேர்ந்த வார்தா திட்டத்தில் கோபாலன் நிபுணன் ஆனன். கிராம ஜனங்கள் சுதந்தரமாகப் பிழைக்கும்படியான பல தொழில்களை அவன் பயின்ருன். நெல் கோதுமை பருத்தி சாகுபடி, பூந்தோட்டம் கனித்தோட்டம் வளர்த்தல், கோழிவளர்த்தல், ஆடு மாடு வளர்த்தல், விவசாயப்பண்ணை நிர்வாகம், பஞ்சுக்கொட்டல், நூற்றல், பாவுபோட்டு நெய்தல், தறிசம்பந்தமான நுட்பங்கள், இராட்டினம் தறிக்கு வேண்டிய தச்சு வேலைகள், எளிதான பலவகை உணவுப்பொருள்கள் தயாரித்தல், சாயம்போடல், கம்பளி நூற்றுநெய்தல், பாய்பின்னல், கூடை முடைதல், காகிதம் செய்தல், தீக்குச்சி செய்தல், பொத்தான் செய்தல், பென்ஸில் செய்தல், அச்சிடுதல்,

புத்தகம் கட்டுதல், தோல் பதனிடுதல், செருப்புத் தைத்தல், பால்பண்ணை நடத்தல் முதலிய பல வேலைகளை அவன் பயின்றான்; தன் நண்பர் பலரை வரவழைத்து அவர்களுக்கு ஆளுக்கொரு தொழிலாகப் பயிற்றினான்; வீராவேசமாகக் கிராமப்பணி புரியத் தொடங்கினான். சுற்றியுள்ள கிராமங்களிலெல்லாம் அவனுக்கு நல்ல மதிப்பு. கம்பீரமான உருவம்! ஒரே ஆடை விநோபா பாவேபோல் அணிந்து, தோளில் பையுடன் தக்ளி நூற்றுக்கொண்டு, கீதையும் துளஸி ராமாயணமும் பாடிவரும் காந்தி-கோபாலை அறியாதவர்கள் இல்லை. காந்தி-கோபாலன் பெயர் ஹிந்துவிலும் அடிக்கடி வந்தது. பல பத்திரிகைகளுக்கு அவன் வார்தாக் கல்வியைப்பற்றி எழுதினான். மகாத்மா மகாதேவ தேசாயிக்கும், பியாரி லாலுக்கும் அடுத்தபடியாக, கோபாலனைத் தம் அந்தரங்கக் காரியதரிசியாகக் கொண்டார். இராஜாஜி வார்தாவுக்கு வரும்போதெல்லாம், காந்தி அடிகள், "தங்கள் சிஷ்யன் என்னுடன் ஐக்கியமாய் விட்டான்" என்பார். இராஜாஜி, "சீக்கிரம் நமது நாட்டில் வார்தாக் கல்வியைப் பரப்ப வா!" என்று சொல்வார்; அவனுக்காக அவர் ஒரு பெரிய திட்டம் போட்டு வைத்திருந்தார்.

---

9. இதோ உன் மகள்!

இச் சமயம் மகாத்மா ஹரிஜனத் தொண்டிற்காகத் தென்னிந்தியாவுக்கு வந்தார். கஸ்தூரிபாயும் உடன் வந்தார். ஹிந்தி சம்மேளனம் பச்சை

யப்பன் கல்லூரியில் நடந்தது. மகாத்மா தலைமை வகித்தார். ஹிந்தி பண்டிதபரீட்சையில் உயர்வாகத் தேறினவர்களுக்கு அவர் திருக்கையால் இனாம் அளித்தார்; சும்மா கொடுக்கவில்லை; சரியானபடி கேள்விகேட்டே தந்தார். முதலில் பிரவேச பரீட்சை யில் முதன்மை பெற்றவர்கள் இனாம் பெற்றனர். பிறகு பாலபண்டித பரீட்சையில் முதன்மைபெற்ற வர்கள் எல்லாரும் இனாம் வாங்கியதும், அனைவருக் கும் முதன்மையாகத் தேறிய ஒரு பெண்மணி மேடைமேல் ஏறி, "மகாத்மாஜி நமஸ்தே!" என்று புன்னகை புரிந்து நின்றாள். சுமார் பதினெட்டு வயதுப் பெண், கண்ணில் நல்ல ஒளி; முகத்தில் திரு விளங்கு கிறது! மகாத்மா ஹிந்தியில் குசலப்பிரச்சினம் செய்தார்; உண்மை தெரிந்ததும் வியந்தார்! அருகே யிருக்கும் கஸ்தூரிபாயிடம் "இதோ உன் மகள்" என் றார். கஸ்தூரிபாய்க்கு நினைப்பு வந்தது. "ஆ நீயா? பிறந்தபோது பார்த்தது; க்ஷேமமா யிரு" என்று ஆசீர்வதித்தார். "மகாத்மாஜி, தங்களைத் தனியாகக் காண வேண்டும். தங்கள் சேவைக்கு என்னை அர்ப் பணம் செய்து விட்டேன். என் கதையைத் தாங்கள் கேட்க வேண்டும்" என்று தயாராக எழுதி வைத்தி ருந்த சீட்டைக் கொடுத்துவிட்டு, இனாம் பெற்று நமஸ்கரித்து, மேடையைவிட்டு இறங்கினாள் பெண்.

இந்தப் பெண் யார் தெரிகிறதா? கஸ்தூரி! மகாத்மா தம் மனைவியுடன் இருந்து கஸ்தூரி சரித் திரத்தை முழுதும் கேட்டார்; இரக்கமும் வியப் பும் கொண்டார். கஸ்தூரி, தான் க்ஷேமநிதியில் போட்டிருந்த பணத்தை எடுத்துக்கொண்டு திருச்சிக்

குக் கிளம்பினுள் ; அங்கே தாயாரில்லை. திவ்யதேச யாத்திரைக்குச் சென்றிருந்தாள். உடனே தன் உறவினர் யாரையும் பார்க்காமல் கஸ்தூரி அடுத்த வண்டியிலேயே சென்னைக்குச் சென்று டாக்டர் ராஜனைக் கண்டாள். ராஜன் தாதாசாரியின் நண்பர். ஆதலால், அவளுக்கு அன்புடன் ஒரு சிபார்சுக் கடிதம் தந்து, சென்னை சேவாசதனத்திற்கு அனுப்பினுர். அங்கே கஸ்தூரி சிறு பெண்களுக்குக் கல்வி கற்பித்துக்கொண்டு, தானும் கல்வியை வளர்த்தாள். சதனத்தலைவி இலக்ஷ்மியம்மாள், கஸ்தூரியைத் தன் மகள் போல நேசித்தாள். கஸ்தூரி அங்கே கற்று ஸ்கூல் பைனல் தேறி, உபாத்தியாயனி வேலைக்கும் படித்து, மோந்தெஸாரியிடம் புதிய கல்விமுறையும் பயின்ருள். இவள் ஹிந்தியைச் சிறப்பாகக் கற்று, பெரிய பண்டிதர்களும் வியக்கும்படி அபிவிருத்தியடைந்து, மாகாணத்திலேயே முதன்மை பெற்ருள். இச்சமயம் அவள் மோந்தெஸாரி கூட்டிய உபாத்தியாயர்கள் மகாநாட்டிற்குச் சென்றிருந்தாள். அங்கே திருச்சி உபாத்தியாயர்கள் மூலம் வாசுதேவன் வைகுண்ட பதவியடைந்ததாகக் கேள்விப்பட்டாள். ஒரு முழுக்குடன் இரண்டுசொட்டு இரத்தக்கண்ணீரும் விட்டுப் பழைய கதையை மறந்தாள். கோபாலன் வார்தாவில் இருப்பதைப் பத்திரிகை மூலம் அறிந்தாள். மகாத்மாவிடம் தன் கதையெல்லாம் விரிவாகச் சொல்லித் தான் சேர்த்துவைத்திருந்த இரண்டாயிரம் ரூபாயையும் பாதகாணிக்கையாக வைத்து, “இனி நான் கஸ்தூரிபாயின் மகள். மாதாஜிக்குத் தொண்டு செய்துகொண்டு பிறவிப் பயனைப் பெறுவேன்” என்று உருக்கமாகப் பேசினுள். கஸ்தூரி

பாய் அவளைத் தழுவிக்கொண்டு, "என் மகளாகவே இரு!" என்று ஏற்றுக்கொண்டாள்.

---

10. பிரிந்தவர் கூடினர்!

மகாத்மா திருவனந்தபுரம், மைசூர், ஆந்திரம், பம்பாய் எல்லாம் சுற்றி, சிவகிராமத்திற்கு வந்து சேர்ந்தார். மாலையில் பிரார்த்தனை நடந்தது. எல்லாரும் கீதை பாராயணம் செய்து கபீர் கீர்த்தனங்களைப் பாடினர். இரண்டு இனிய குரல்கள் கேட்டன. காந்திக்கருகில் கோபாலன் கம்பீரமாக நின்று பாடுகிறான். கஸ்தூரிபாய்க்கருகே கஸ்தூரி நின்று பாடுகிறாள். இருவரும் பார்த்து நாளானதால் சட்டென்று அடையாளம் தெரியவில்லை. மேலும் இருவர் உள்ளமும் கடவுளிடம் இலயித்திருந்தது.

பிரார்த்தனை முடிந்து உணவு கொண்டதும், காந்தி கஸ்தூரியைக் கூப்பிட்டார். "கோபால், பேசு; தமிழ் கேட்கிறேன். இதோ உனக்கொரு துணைவியை அழைத்து வந்திருக்கிறேன்! அவள் கஸ்தூரிபாயின் அபிமான புத்திரிதான்; பேசுங்கள்!" என்றதும் கோபாலனுக்கு உடனே விஷயம் தெரிந்தது. கஸ்தூரி நாணப் புன்னகையுடன் கடைக்கண்ணால் கோபாலனைப் பார்த்துவிட்டு, மகாத்மாவை நமஸ்கரித்து, "இவரே என் உயிரைக் காத்த மகான்" என்று ஆடிப்பெருக்குச் சம்பவத்தைச் சொன்னாள்.

"கோபால், நீ காப்பாற்றிய பெண்ணே உன் சேவைக்குத் துணையாக வந்துவிட்டாள். பார்!" என்று புன்னகை புரிந்தார். "எல்லாம் மகாத்மாஜியின் கிருபை" என்று கோபால் வணங்கினான்.

இருவரும் தங்கள் விருப்பத்தை வெளிப்படையாக மகாத்மாவிடம் சொன்னார்கள். மகாத்மா சேட் ஜம்னுலாலிடம் அவர்கள் விஷயத்தைத் தெரிவித்தார். தருமப் பிரபுவான ஜம்னுலால் உடனே ஒரு வீட்டைக் காலிபண்ணி, கஸ்தூரியும் கோபாலனும் வசிக்கச்செய்து, அவர்கள் சேவைசெய்ய ஒரு கிராமத்தையும் ஏற்பாடுசெய்து கொடுத்தார். காந்தி-கோபாலனும், கஸ்தூரியும் ஆடிப்பெருக்கன்று மகாத்மா தம்பதிகளின் ஆசியைப் பெற்றுக் குடித்தனம் செய்யத் தொடங்கினார்கள். இருவரும் மகாத்மாவின் ஆணைப்படி சேவாவிரதம் பூண்டு பரிசுத்தமாக வாழ்ந்தனர். அவர்கள் சேவையின் பலனாக வார்தாவுக்கருகே ஒரு காந்திக் கிராமம் தழைத்தது!

ஆடிப் பெருக்கில் தொடங்கிய காதல் ஆடிப் பெருக்கிலேயே பரிசுத்த நிறைவெய்தியது. கஸ்தூரி-கோபாலர் வாழ்க! மகாத்மா வாழ்க!

இச்சமயம் கோபாலன் பெயர் பிரபலமானதால் சிவகடாக்ஷம் சாஸ்திரிகளும், பொன்னு சாஸ்திரிகளும் அவனைத் தேடிக்கொண்டு வார்தாவுக்கு வந்தனர். கோபாலன் தன் சேவைகளையும், மகாத்மாவின் பரிசுத்த வாழ்வையும் நேரே காட்டினான். இருவர் மனமும் மாறிவிட்டது. "கோபாலா, பருவ

தம் போய்விட்டாள். எனக்கோ சந்ததியில்லை; என் சொத்தெல்லாம் மகாத்மாவுக்கே அர்ப்பணம்" என்றார் பொன்னு. "என் சொத்தும் அர்ப்பணம்" என்றார் தந்தை. மகாத்மா மகிழ்வுடன் அங்கீகரித்து, அதைக்கொண்டு லால்குடியில் ஒரு சேவாசிரமம் நடத்தச் சொன்னார். அதை ஒழுங்காக நிலை நாட்ட, கஸ்தூரியும் கோபாலனும் வந்தனர். இருவருக்கும் ஏக மரியாதை, ஊர்வலங்கள், ஜயகோஷங்கள் நடந்தன. பெரிய கூட்டம் நடந்தது. அதற்குக் குணசேகரமும் வந்திருந்தார். கஸ்தூரியின் பெருமையை அப்போதே அவர் அறிந்தார். அவர் மனமும் மாறியது. கஸ்தூரியும் கோபாலனும் லால்குடி சேவாசிரமத்திற்குத் திறப்புவிழா நடத்திப் பேசிய பேச்சு, பணக்காரர் பலர் உள்ளத்தை மாற்றியது:

"பக்திபரோபகாரம் இரண்டே மனித வாழ்வின் நோக்கம். இந்த உடல், வாடகை வீடுதான்; அதில் யாரும் நீடித்திருக்க முடியாது. இக் கூண்டில் ஜீவப்பறவை இருக்கும்போதே, நமக்கும் பிறர்க்கும் நல்லது தேடுவோம். பிறருக்கு நன்மை செய்தால் நமக்கும் நன்மையாகும். வேருக்கு நீர் வார்த்தால் கிளையும் செழிக்கும். காலத்திற்கேற்றபடி பெரியார்கள் வழிகாட்டுகிறார்கள். இந்தக் காலப் பெரியவர் உலகம் கொண்டாடும் மகாத்மா.

அவர்வழி பற்றிப் பொதுஜனசேவை செய்வதே இக்காலத்திற்குப் புண்ணியமாகும். நாங்கள் பிறந்து வளர்ந்த லால்குடி

யில் எங்கள் தந்தையர் செல்வத்தைக் கொண்டே ஒரு பெரிய சேவாசிரமம் அமைக்க நேர்ந்ததைப்பற்றி மகிழ்கிறோம். இதில் ஜாதிமத வேறுபாடில்லாமல் பொது நலத் தியாகிகள் எல்லாரும் சேரலாம். இங்கே செல்வச் சோம்பல் இல்லை. யாரும் யாருக்கும் அடிமை யில்லை. மகாத்மாவைத் தலைமையாகக்கொண்டு சுற்றியுள்ள ஜனங்களுக்குக் கல்வியும் தொழிலுந் தந்து, கவலையற்று வாழச் செய்வதே இந்த ஆசிரமத்தின் நோக்கம். இங்கே விவசாயம் முதல் அச்சுத் தொழில் வரையில் சுமார் நூறு தொழில்களுக்கு இடமிருக்கும். தேர்ச்சி பெற்ற நிபுணர்கள் அந்தந்தத் தொழில்களைக் கற்றுக் கொடுத்துத் தொண்டர்களைத் தயாரிப்பார்கள். வார்தா முறைப்படியே கல்வி யளிக்கப்படும். தொண்டர்கள் அனைவருக்கும் உணவும் ஆடையும் அவசியமான சௌகரியங்களும் கிடைக்கும். யாருக்கும் தனிச்சொத்துரிமை கிடையாது. பணமெல்லாம் தொழிலாகிப் பண்டமாகிப் பலருக்கும் உதவும். சுமார் 500 தொண்டர்களுக்கு இங்கே வேலை யுண்டு. இச் சேவாசிரமம் தமிழ்நாட்டிற்குப் பெருமை தரும். தமிழர் அன்பும், மகாத்மாவின் ஆசியும், இறைவன் அருளும் வெற்றி தருக!"

கஸ்தூரி முற்றிற்று.

அன்பு நிலய நூல்கள்

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

இயற்றியவை

		ரூ.	அ.
முன்னேற்றப் பாடல்கள்		1	4
யோகசித்தி (மூலமும் உரையும்)	ராப்பர்	3	4
ஷை (மூலம்)	ராப்பர்	0	4
ஷை ஷை	(காலிகோ)	0	6
கவிக் கனவுகள்		0	12
பேரின்பம்		0	4
அன்புறுதி		0	4
பொதுநெறி (மூலமும் உரையும்)		0	2
பக்தி பரவசம்		0	12
காலத்தேர் (காவிய நாடகம்)		1	4
ஸ்ரீ ராமதூதன் (கம்பன் கலை நாடகம்)		1	4
முல்லை மணம் (ஓரங்க இசை நாடகம்)		0	4
அன்பின் அற்புதம் (நாடகம்)		1	0
கல்விக் கதிர் (புதிய கல்வி முறை)	ராப்பர்	1	4
ஷை	காலிகோ	1	12
உடலுறுதி		1	10
அன்னை		0	4
அரவிந்த யோக தீபிகை		0	8
மகாகவி தாந்தே (காவிய விமர்ஸனம்)		1	8
சமய சாரம்		0	4

கிடைக்குமிடம் :

ANBU NILAYAM

RAMACHANDRAPURM (POST)

(TIRUMAYAM S. I. R.)

TRICHY (DIST.)

2173

ஓம்
சுத்த சக்தி
அன்பு நிலையம்

Commercial Printing &
Publishing House, Madras